# திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி
# ஏழாம் பத்து

## ஏழாம் திருமொழி - திருவுக்கும்
## திருவழுந்தூர் 3

** திருவுக்கும் திருவாகிய செல்வா! *
தெய்வத்துக்கு அரசே! செய்ய கண்ணா! *
உருவச் செஞ்சுடர் ஆழி வல்லானே! *
உலகுண்ட ஒருவா! திருமார்பா **
ஒருவற்கு ஆற்றி உய்யும் வகை அன்றால் *
உடன் நின்று ஐவர் என்னுள் புகுந்து * ஒழியாது
அருவித் தின்றிட அஞ்சி நின் அடைந்தேன் *
அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே! 1

பந்தார் மெல்விரல் நல்வளைத் தோளி *
பாவை பூமகள் தன்னொடும் உடனே
வந்தாய் * என் மனத்தே மன்னி நின்றாய் *
மால்வண்ணா! மழை போல் ஒளிவண்ணா! **
சந்தோகா! பௌழியா! தைத்திரியா! *
சாம வேதியனே! நெடுமாலே! *
அந்தோ! நின்னடி அன்றி மற்றறியேன் *
அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே! 2

நெய்யார் ஆழியும் சங்கமும் ஏந்தும் *
நீண்ட தோள் உடையாய்! * அடியேனைச்
செய்யாத உலகத்திடைச் செய்தாய் *
சிறுமைக்கும் பெருமைக்கும் உள் புகுந்து **
பொய்யால் ஐவர் என் மெய்குடி ஏறிப் *
போற்றி வாழ்வதற்கு அஞ்சி நின் அடைந்தேன் *
ஐயா! நின்னடி அன்றி மற்றறியேன் *
அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே! 3

பரனே! பஞ்சவன் பௌழியன் சோழன் *
பார் மன்னர் மன்னர் தாம் பணிந்து ஏத்தும்
வரனே! * மாதவனே! மதுசூதா! *
மற்றோர் நல்துணை நின் அலால் இலேன் காண் **
நரனே! நாரணனே! திருநறையூர்
நம்பீ! * எம்பெருமான்! உம்பர் ஆளும்
அரனே! * ஆதிவராகம் முன் ஆனாய்! *
அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே! 4

விண்டான் விண் புக வெஞ்சமத்து அரியாய்ப் *
பரியோன் மார்வகம் பற்றிப் பிளந்து *
பண்டு ஆன் உய்ய ஓர் மால்வரை ஏந்தும் *
பண்பாளா! பரனே! பவித்திரனே! **
கண்டேன் நான் கலி யுகத்ததன் தன்மை *
கருமம் ஆவதும் என்தனக்கு அறிந்தேன் *
அண்டா! நின்னடி அன்றி மற்றறியேன் *
அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே! 5

தோயா இன்தயிர் நெய் அமுது உண்ணச் *
சொன்னார் சொல்லி நகும் பரிசே * பெற்ற
தாயால் ஆப்புண்டு இருந்து அழுது ஏங்கும்
தாடாளா! * தரையோர்க்கும் விண்ணோர்க்கும்
சேயாய்! ** கிரேத திரேத துவாபர
கலி யுகம் இவை * நான்கும் முன் ஆனாய்! *
ஆயா! நின்னடி அன்றி மற்றறியேன் *
அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே! 6

கறுத்துக் கஞ்சனை அஞ்ச முனிந்தாய்! *
கார்வண்ணா! கடல் போல் ஒளிவண்ணா! *
இறுத்திட்டு ஆன்விடை ஏழும் முன் வென்றாய்! *
எந்தாய்! அந்தரம் ஏழும் முன் ஆனாய்! **
பொறுத்துக் கொண்டு இருந்தால் பொறுக்கொணா *
போகமே நுகர்வான் புகுந்து * ஐவர்
அறுத்துத் தின்றிட அஞ்சி நின் அடைந்தேன் *
அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே! 7

நெடியானே! கடி ஆர் கலி நம்பீ! *
நின்னையே நினைந்து இங்கு இருப்பேனை *
கடியார் காளையர் ஐவர் புகுந்து *
காவல் செய்த அக்காவலைப் பிழைத்து **
குடி போந்து உன்னடிக் கீழ் வந்து புகுந்தேன் *
கூறை சோறு இவை தந்து எனக்கருளி *
அடியேனைப் பணி ஆண்டு கொள் எந்தாய்! *
அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே! 8

கோவாய் ஐவர் என் மெய்குடி ஏறிக் *
கூறை சோறு இவை தா என்று குமைத்துப்
போகார் * நான் அவரைப் பொறுக்ககிலேன்
புனிதா! * புட்கொடியாய்! நெடுமாலே! **
தீ வாய் நாகணையில் துயில்வானே! *
திருமாலே! இனிச் செய்வது ஒன்று அறியேன் *
ஆவா என்று அடியேற்கு இறை இரங்காய் *
அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே! 9

** அன்னம் மன்னு பைம்பூம்பொழில் சூழ்ந்த *
அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானை *
கன்னி மன்னு திண்தோள் கலிகன்றி
ஆலி நாடன் * மங்கைக் குல வேந்தன் **
சொன்ன இன்தமிழ் நன்மணிக் கோவை *
தூய மாலை இவை பத்தும் வல்லார் *
மன்னி மன்னவராய் உலகாண்டு *
மான வெண்குடைக் கீழ் மகிழ்வாரே 10

**அடிவரவு:** திருவுக்கும் பந்தார் நெய் பரனே விண்டான் தோயா கறுத்து நெடியானே கோவாய் அன்னம் செங்கமலம்

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---